பக்கங்கள் 6   விலை சதம் 40 ★

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20   பங்குனி 16 ரபி அவ். 19   இதழ் 47
யாழ்ப்பாணம்   புதன்கிழமை   29-3-78

ஆஸ்தான கவிஞராக கண்ணதாசன்

‘தமிழுக்கு அளித்துள்ள கௌரவம் இது’

சென்னை, மார்ச். 28

கலை உலகக் கவிஞர் கண்ணதாசனை, தமிழக அரசு கௌரவித்துள்ளது.

கவிஞர் கண்ணதாசன், தமிழ்நாடு அரசின் ஆஸ்தான கவிஞராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த விபரத்தை. கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகம் இன்று தமிழக சட்டசபையின் இரு சபைகளிலும் இன்று வெளியிட்டார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஆஸ்தான கவிஞராக நாமக்கல் கவிஞர் இருந்தார். அவர் இறந்தபின்னர் இந்த இடம் நிரப்பப்படாமலிருந்தது. இப்போது கவிஞர் கண்ணதாசன் ஆஸ்தானகவிஞராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கண்ணதாசன் இதுபற்றி இன்று மாலை நிருபர்களிடம் தெரிவிக்கையில்; “தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் தமிழக அரசு அளித்திருக்கும் கௌரவம் இது” என்று பெருமைபாராட்டினார்.

கவிஞருக்கு மாதம் ஆயிரம் ரூபா ஊதியத்துடன் உத்தியோக பூர்வமான கார், டெலிவிஷன் வசதிகளும் உண்டு;

‘நடைமுறைப்பிரச்னை:கமிஷன் முடிவுசெய்யவேண்டும்!’

தூதுவர்

(கொழும்பு)

இலங்கையில் புதிய இந்தியத் தூதுவராக திரு. தோமஸ் ஏபிரகாம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சொய்சா ஆஜர் பற்றி பார்லட் கோரிக்கை

— கா. யோகநாதன் —
(யாழ்ப்பாணம்)

பாதுகாப்புப்படையினருக்காக இங்கே சட்டத்தரணி சொய்ஸா ஆஜரானது தொடர்பாக எழுந்துள்ள நடைமுறைப் பிரச்னைபற்றி முடிவு செய்தாகவேண்டும் என்று சட்டத்தரணி பார்லட், சன்சோனிக் கமிஷன் முன் நேற்று தெரிவித்தார்.

சட்டத்தரணி பார்லட் கமிஷன் முன் மேலும் கூறியதாவது: ‘ஸ்தாபன ரீதியில் பொலிஸாரோ இராணுவத்தினரோ ஆகஸ்ட் கலவரத்தில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. பொலிஸ் சேவையிலுள்ள குறிப்பிட்ட சில தனிப்பட்ட உத்தியோகத்தர்களே இங்கு சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியத்தின்படி, கலவரங்களை உருவாக்கியுள்ளனர்.

சொய்ஸா கூறியதுபற்றி...

“இந்தக் கலவரங்கள் தொடர்பாக இராணுவத் தளபதிகளோ, அல்லது படைக்கள தளபதிகளுக்கோ எதிராக கட்டளை பிறப்பிக்கத் தேவையில்லை. இதற்கு பதிலளித்த கமிஷனர் கட்டளை பிறப்பிக்கப்பட்டும் சில உத்தியோகத்தர்களுக்காகவே தாம் ஆஜராக விரும்பதாகவும், அந்த எண்ணிக்கையை விசாரணை தொடரும்போது அறியலாம் என்றும் சட்டத்தரணி சொய்சா தெரிவித்திருப்பதாக கூறினார்.

சட்டத்தரணி பார்லட் திரு. சொய்ஸா தம்மிடம் உண்மையான சாட்சியங்கள் இருப்பதாகவும் அவை வெளிக்கொணரப்பட்டு விட்டால், நிலைமை மாற்றியமைந்துவிடும் என்றும் தெரிவித்தார். கமிஷன் கட்டளை விருப்பதற்கு காத்திராமல் அச்சாட்சிகளை அவர் சமர்ப்பிக்க வேண்டும்.

சாட்சியங்களை ஆஜர்செய்யவேண்டும்

“இங்கு ஆஜர்செய்யப்பட்ட சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்வதன் மூலம் அவர் எதனையும் நிரூபிக்க முயலமுடியாது. அவர் உண்மையாக தமக்கு தெரிந்த சாட்சியங்களை இங்கு ஆஜர் செய்தாக வேண்டும்”.

“ஒரு உத்தியோகத்தரின் எதிர்வாதம் பல்வேறு முறையில் அமையலாம் சில சமயம் அது வேறு எங்கு நடந்த சம்பவத்தைப்பற்றி குறிக்கலாம். அல்லது அச்சம்பவம் பற்றி அறியாமலிருக்கலாம.

“உண்மை விஷயங்களைத் தெரிந்த எவராக இருந்தாலும் அவர் அவைகளை கமிஷன் முன் தெளிப்படுத்துவதன் மூலம் கமிஷனுக்கு உதவி புரிய வேண்டும்.

கமிஷனர் அளித்த பதில்

கமிஷனர், இதற்குப் பதிலளிக்கையில், விசாரணையில் கலந்துகொள்ளுமுன் எந்த தரப்பினரும், அதுபற்றி அறிவித்தல் கொடுத்திருக்க வேண்டும் என்று கூறினார். (ஸ)

‘தமிழரின் கடைகளுக்கு தீ வையுங்கள்’

தலைமைக்காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் இப்படிக் கூறினாராம்

அனுராதபுரம் சட்டத்தரணி சி. சிற்றம்பலம் “ஆகஸ்ட் 17ம் தேதி நான் கெக்கராவை கோர்ட்டிற்கு வழக்கொன்றுக்கு சென்றேன். வழக்கு முடிந்ததும், பஸ்ஸில் திரும்பிக்கொண்டிருக்கையில் மருதங்கடவையில், ரோட்டில் தடைபோட்டு பஸ்ஸை மறித்தார்கள். 50 பேர் கபி ஆயுதங்களுடன் நின்றார்கள். ‚பஸ்ஸில் தமிழர்கள் இருக்கிறார்களா?’ என்று கேட்டார்கள். சாரதியும், கண்டக்டரும், தமிழர் இல்லை’ என்று கூறினார்கள் அவர்கள் பஸ்ஸிற்குள் ஏறி தேடிப்பார்த்த பின் இறங்கினார்கள். அனுராதபுரத்திற்கு 2 மணிக்குபோய் சேர்ந்தோம் 6-30மணிக்கு என் மகன் வந்து ‘தமிழர்கள் அகதிகள் முகாமிற்கு செல்வதாக கூறினர். என் வீட்டில் 20 தமிழர் பாதுகாப்பிற்காக இருந்தனர்.”

வவனியாவைச் சேர்ந்த சட்டத்தரணி என். எம். எக்ஸ். சொர்ணபாலா: “ஆகஸ்ட் 18ம் தேதி நான் கோர்ட்டிலிருந்து வீட்டிற்கு வந்தபோது. ரோயல் தியேட்டருக்கு எதிரில் சிங்களவருக்கு சொந்தமான கடையொன்றிலிருந்து பொருட்கள் வண்டியில் ஏற்றப்பட்டது. பெறுமதியற்ற சாமான்கள் மட்டுமே கடையில்விடப்பட்டிருந்தது இதுவழக்கத்திற்குமாறான நடவடிக்கையாக இருந்தது. இரவு 7 மணிக்கு நான் வீட்டுவாசலில் நின்றபோது அந்த சிங்களவரின் கடை எரிந்துகொண்டிருந்தத். இந்தக்கடை என் வீட்டிலிருந்து 100 யார் தூரத்திலுள்ளது எரிந்த கடையிலிருந்து சயிக்கிளில் வந்துகொண்டிருந்த ஒரு பொலிஸ்காரர் வீதியில் நின்றவர்களை ‘போங்கடா’ என்று கூறிக்கொண்டு வந்தார். அவரின் நம்பர் எனக்குத் தெரியாது. இருளாக இருந்தபடியால், அவரை அடையாளம் காணமுடியாமல்போய்விட்டது. நான் கடைக்கு சமீபத்தில் சென்றேன். 25 யார் தூரத்தில் நின்றேன் 15 நிமிடத்தால் இரண்டு பொலிஸ் ஜீப் வந்தது தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் ஜீப் ஒன்றிலிருந்து இறங்கி எரிகிற கடையை பார்த்துவிட்டு; அருகில் நின்றவர்களிடம் ‘இனி தமிழரின் கடைகளுக்கு தீ வையுங்கள்’ எனக் கத்தினார்! அடுத்த நாள் ஆகஸ்ட் 19ம் தேதி அதே நேரத்தில், தமிழருக்கு சொந்தமான மரக்கறி கடைகள் தீப்பற்றி எரிந்தன”

(இவர்களின் சாட்சியங்கள் முழுவிபரம் நாளைய ‘ஈழநாடு’ இதழில் வெளிவரும்.)

‘வவனியா பட்டினததை எரிக்க உங்கள் பங்கைச் செலுத்துங்கள்!’

உதவி அரசாங்க அதிபரிடமிருந்து சிங்கள மக்களுக்கு இப்படி அழைப்பு வந்ததாம்

(யாழ்ப்பாணம்)

“வவனியா தெற்கு சிங்களப்பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. ரஞ்சன் சமரவீரா இருபதாம் திகதி மாலை ஓர் அரசாங்க ஜீப் வண்டியில் விரப்பமடுவன என்னும் சிங்களக் கிராமத்திற்குச் சென்று அங்கு சிங்கள மக்களை அழைத்து வவுனியாப் பட்டினத்தை எரிப்பதற்கு சகல ஒழுங்குகளும் செய்தாகி விட்டது ஆகவே உங்களது பங்கை நீங்கள் செய்யவேண்டும். நீங்கள் நான் அனுப்பும் வாகனத்தில் அலவாங்கு, துப்பாக்கி போன்ற ஆயுதங்களுடன் மடுக்கந்த விகாரைக்கு வந்துவிட வேண்டும் எனக் கூறியதைக் கேட்டுக் கொண்டு நின்ற ஒருவர் என்னிடம் வந்து அறிவித்தார். இவரின் வாக்குமூலத்தை சத்தியக்கடுதாசி மூலம் பெற்றுப் பிரதம மந்திரிக்கு அனுப்பியுள்ளேன்.

“அரசாங்க இலாகாவுக்குச் சொந்தமான ஜீப் வண்டிகளில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை ஏற்றி வவனியா தெற்கு சிங்களப் பிரிவு உதவி அரசாங்க அதிபரும் மடுக்கந்த கிராம சேவகரும் இன்னும் சிலரும் கிராமப்புறத்திற்கு கொண்டு சென்று பங்கிட்டதாகவும், பங்கிட்ட வேளையில் ஏற்பட்ட சச்சரவின் விளைவாக துவக்குச் சூடு சம்பவம் நடைபெற்றதாகவும், இதனால் மடுக்கந்த கிராம சேவகர் கையில் காயமுற்று மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றதாகவும் நம்பகமாக நான் அறிகின்றேன்”.

இவ்வாறு வவுனியா தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு தா. சிவசிதம்பரம் சன்சோனிக் கமிஷன் முன் நேற்று சாட்சியமளிக்கையில் கூறினார்.

“மடுக்கந்த கிராமசேவகரும் இன்னும் சிலரும் மாமடுவ என்னும் கிராமத்தில் உள்ள நீர்ப்பாசன இலாகாவுக்குச் சொந்தமான வெடிமருந்துக் களஞ்சியத்தை உடைத்து அதனுள் இருந்த பொருட்களை செப்டம்பர் மாதம் 2ம் திகதி எடுத்துக்கொண்டு சென்றதாக மாமடுவ சிங்களக் கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிங்களப் பிரஜை பொலிஸில் புகார் செய்துள்ளார். இது குறித்து வவனியா நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது” என்றும் திரு. தா. சிவசிதம்பரம் மேலும் சாட்சியமளிக்கையில் கூறினார்

(கமிஷன்: வவுனியாவில் 6-ம் பக்கம் பார்க்க)

அமைதி நிலவுகிறது

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தலைதூக்கியமோதல்கள் இப்போது தணிந்துள்ளதாகவும், இப்பகுதியில் பூரண அமைதி நிலவுவதாகவும் யாழ்ப்பாணம் எம். பி திரு வெ. யோகேஸ்வரன் நேற்றிரவு ‘ஈழநாடு’விடம் தெரிவித்தார்.

நேற்று இப்பகுதியில் எந்தவித அசம்பாவிதமும் நிகழவில்லை. மோதலில் சம்பந்தப்பட்ட இருபகுதியினரையும் சமரசப் பேச்சுக்களுக்கு அழைக்கும் முயற்சிகள் ஓரளவு வெற்றி அளித்திருப்பதாகத் தெரியவருகிறது. ஆயுதம் தரித்த பொலிஸார் இப்பகுதியில் தொடர்ந்து காவல் புரிகின்றனர்.

தென் லெபனானில் ஆக்கிரமிப்பு:

இஸ்ரேலுக்கு எதிராக அரபு நாடுகள் அணிதிரள வேண்டும்

வெளியுறவு அமைச்சர்கள் கோரிக்கை

கெய்ரோ, மார்ச் 28 தென்லெபனானில் இஸ்ரேலியர் நடத்தும் ஆக்கிரமிப்பைக் கருத்தில்கொண்டு சகல அரபுநாடுகளும் இஸ்ரேலுக்கு எதிராக ஒன்றுபடவேண்டும்.

இக் கோரிக்கையை நேற்றிரவு கெய்ரோவில் கூடிய அரபுநாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் மகாநாடு சகல அரபுநாடுகளுக்கும் விடுத்தது.

எகிப்திய அதிபர் ஜனாப் அன்வர் சதாத்தின் இஸ்ரேலிய விஜயத்தைக் கண்டித்து வந்த சிரியா, ஈராக், அல்ஜீரியா உட்பட ஐந்து அரபு நாடுகள் இம் மகாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

அதேவேளையில், ஜனாப் சதாத்தின் இஸ்ரேலிய விஜயத்தை வன்மையாகக் கண்டித்துவந்த பாலஸ்தீன விடுதலை இயக்கம் இம் மகாநாட்டில் கலந்துகொண்டது.

தென் லெபனானில் இஸ்ரேல் ஆக்கிரமிப்புக் எதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் இம் மகாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டுவருகின்றன. (இ)

காங்கிரஸ்- இந்திராகாங்கிரஸ்

எக்காரணம் கொண்டும் இணையாது

எதிர்க்கட்சித் தலைவர் சவான் உறுதி

புதுடில்லி, மார்ச் 28 இந்திய உத்தியோகபூர்வ காங்கிரசும் இந்திராகாங்கிரசும் எக்காரணம்கொண்டும் இணையமாட்டாது என்று லோகசபை எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பி. சவான் நேற்று உறுதியாகக் கூறினர்.

கோழிக்கோட்டில்பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே திரு. சவான் மேற்கண்டவாறு கூறினர்.

மகாராஷ்டிர மாநிலத்தில் இரண்டு காங்கிரஸ் கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைத்துவிட்டதால் அதன் அர்த்தம் இரு கட்சிகளும் இணைந்துவிட்டதாகவோ இணையும் என்றோ கருதக்கூடாது. அது ஒரு தற்காலிக ஏற்பாடே என்றும் திரு சவான் கூறினர்.

ஜனதா கட்சியுடன் உத்தியோகபூர்வகாங்கிரஸ் இணைந்து இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு எதிராக சதிசெய்கிறது என்றுஇந்திராகாங்கிரஸ் சுமத்திவரும் குற்றச்சாட்டு அர்த்தமற்றது— ஆதாரமற்றது— விஷமத்தனமானது என்றும் அவர் கூறினர். (இ)

ஏப்ரல் 1ல் பூட்டோவின் அப்பீல் விசாரணை

லாகூர், மார்ச் 28 பாகிஸ்தான் முன்னள் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோவின் அப்பீல் விசாரணை ஏப்ரல் மாதம் 1ம் திகதி லாகூர் உயர் நீதிமன்றத்தில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொலைக் குற்றச்சாட்டின் பேரில் தமக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து ஜனாப் பூட்டோ கடந்த வாரம் அப்பீல்செய்தது தெரிந்ததே. [இ]

பாலஸ்தீனருக்கு

வைஸ்மன் எச்சரிக்கை

ஜெருசலம், மார்ச் 28 தென்லெபனானில் இஸ்ரேல் கைப்பற்றிய பகுதிகளில் நிலைத்து நிற்கும் இஸ்ரேலியப் படைகள் மீது பாலஸ்தீனர்கள் தாக்குதல் நடத்தினால் உடன் இஸ்ரேல் தீவிர பதில் நடவடிக்கையை எடுக்கும்

[5ம் பக்கம் பார்க்க]

பாகவதருக்கு பொன்னாடை

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் ரோட் அருள்மிகு நாச்சி அம்மன் கோயிலில் பங்குனி உத்தரத் திருவிழாவில் நடைபெற்ற வில்லிபாரத நிரிவுரையின் பூர்த்தி விழாவில் பாகவதர் பிரம்மஸ்ரீ வை. வித்தியானந்தசர்மாவுக்கு யாழ். மாதரசபை ஆணையாளர் திரு. வே. சிவஞானம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். மேற்படி ஆலய நிர்வாகஸ்தர்களில் ஒருவரான ஒவசியர் கனகரத்தினம் பாகவதரைப் பாராட்டி பொற்கிழி வழங்கினர். பாகவதர் அவர்கள் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளது பிரதமசிஷ்யன ஆவார். [இ]

இளைஞர் முன்னேற்றக் கழகம்

[சித்தன்கேணி]

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் புது வருட நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: தெ. மனோகரன், உபதலைவர்: க. நாகேஸ்வரன், செயலாளர்: சி. அருள்மயம், உபசெயலாளர்: சு. சோமாஸ்கந்தமூர்த்தி, பொருளாளர்: மு. ஜயசேகரன், உபபொருளாளர்: தி. இராஜ்குமார், விளையாட்டுக் காரியதரிசி: ந. விக்னேஸ்வரன், நிலையப் பொறுப்பாளர்: பூ. சிவகுமார், கலாச்சார உத்தியோகஸ்தர்: பூ. சிவசிதம்பரம், மேலதிக நிர்வாகிகள்: து. கோணேசநாதன், அ. திவாகரன். [இ]

2-வது ஆண்டு நினைவாஞ்சலி



வி. எஸ். விஞயகமூர்த்தி

(நல்லதம்பி)

பிறப்பு: 20-10-1956,
இறப்பு: 29-3-1976,

இன்றோடு ஈராண்டு எம்மை விட்டு நீ சென்று நன்றே எம்மை விட்டு நீங்கியது என்றாலும் இன்றுவரை இறைவனின் இதயமும் இரங்கவில்லை என்றோ ஒரு நாள் உனைத் தேடி நாம் வரலாம் அன்றுவரை உந்தன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப்பிரார்த்திப்போம் ஆண்டுதோறும்.

இவ்வண்ணம்
அன்பு அண்ணன் வி. எஸ். இராசதுரை (விஞசி சண்முகம் குடும்பத்தினருக்காக)
சண்டிலிப்பாய் கிழக்கு.
8878

லோகநாதன் இன்ஸ்ரிரியூட்
166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
புதிய வகுப்புகள் ஆரம்பம் 1-4-78
G. C. E. O/L ஓகஸ்ட் பரீட்சைக்குரிய
முழுநேர வகுப்புகள்
G. C. E A/L 1979 ஏப்பிரல் -பரீட்சைக்கான
வகுப்புகள்
தகைமைகள்:- G. C. E O/L 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல்வேண்டும் அல்லது 5 பாடங்கள் சித்தியடைந்திருத்தல்வேண்டும். அதில் 3 பாடங்களில் திறமை சித்தி இருத்தல்வேண்டும்
விண்ணப்பப்படிவங்களை சொந்த விலாசமிட்ட தபாலுறைகளை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவு திகதி: 31-3-78

தெல்லிப்பழை ப நோ கூ சங்கம் (வரைவுள்ளது)

பதவி வெற்றிடம்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் பாண் கடுநர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித் தராதரப் பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அனுபவம்பற்றிய சான்றுகள், அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகளுடன் தபால்மூலம் 78-04-05ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பொது முகாமையாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை என்ற விலாசத்திற்கு அனுப்பவும். சம்பள நிர்ணய சபைத்திட்டத்திற்கிணங்க சம்பளம் வழங்கப்படும். பிணைப்பணமாக ரூபா 250/- சங்கத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

பொது முகாமையாளர்

28-3-78 8893

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

வரி விளம்பரம்

தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும், வேலை பழகுபவர்களும் தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும்; நேரில் வரவும். சேவிகிளாஸ் அன் மெற்றல் வேக்ஸ், நீர்வேலி. 8873

தவறிவிட்டது

உரும்பராய் சந்திக்கு அருகாமையில் பஸ் கிராண்டில் 26-3-78 எனது கூடிய தொகைப்பணம் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைத்தால் சன்மானம் ரூபா 200/- வழங்கப்படும். க. செல்வரத்தினம், உரும்பராய் தெற்கு, உரும்பராய். 8885

விற்பனைக்கு

75 C C லம்பிறட்டா வெகா [Lambretta vega] இத்தாலியன் மொடல் ஸ்கூட்டர் நல்லநிலையில் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு 11 A வளன்புரம், கொழும்புத்துறை. 8891

பிஸ்கால் விற்பனை

மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை
வழக்கு இலக்கம்: 13477
தொண்டமானறு (1) சின்னையா கிருஷ்ணசாமி
வழக்காளி
எதிர்
செல்வச்சந்நிதி (1) சங்கரப்பிள்ளைஐயர் கந்தசாமிஐயர்
கைம்பெண் மனோரஞ்சிதமணி
எதிராளி
முதலும் வட்டியும் ரூபா 12,50-00
பிஸ்கால் செலவு ரூபா 200-00

மேற்குறிப்பிட்ட வழக்கின் தீர்வைத் திகதியிலிருந்து முழுத்தொகையையும் வட்டியையும் அறவிடுவதற்காக பின்னுற காணும் ஆதனத்தை 1978ம் ஆண்டு சித்திரை மாதம் 19ம் திகதி காலை 10-30 மணியளவில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று தொண்டமானறு இறைகாட்டுப்புலம் நி. பர. 14¼ முதிரை நின்ற செம்பாடு நி.பர. 55/8 எல்லை கிழக்கு தம்பர் செல்லையாவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்குந்தெற்கும் கந்தசாமிஐயர் உலகநாதனுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கு ஆற்றங்கரைத்தெரு, இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், தென்னைகள், கிணறுகள், புளியமரங்கள், ஆலமரங்கள், கோவில் மடப்பள்ளி மடங்கள் அடங்கலிற் சொரியலாய் பன்னிரண்டிலொரு பங்கில் அரைவாசியும் குறித்த ஆதனத்தில் கந்தசாமிஐயரால் கட்டப்பட்ட நாலு கடைகளில் சொரியலாய் அரைவாசியும்.

கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம்
பிஸ்கால்

மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை.
22-3-1978. 8889

பிஸ்கால் விற்பனை

மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை
வழக்கு இலக்கம்: 13478
தொண்டமானறு (1) இராசா இராசமணி
(2) பெண் நாகேஸ்வரி
வழக்காளிகள்
எதிர்
செல்வச்சந்நிதி (1) சங்கரப்பிள்ளைஐயர்
கந்தசாமிஐயர்
கைம்பெண் மனோரஞ்சிதமணி
எதிராளி
முதலும் வட்டியும் ரூபா 12,550-00
பிஸ்கால் செலவும் ரூபா 200-00

மேற்குறிப்பிட்ட வழக்கின் தீர்வைத் திகதியிலிருந்து முழுத்தொகையையும் வட்டியையும் அறவிடுவதற்காக பின்னுற் காணும் ஆதனத்தை 1978ம் ஆண்டு சித்திரை மாதம் 19ம் திகதி காலை 11-00 மணியளவில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆதனஇடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று தொண்டமானறு இறைகாட்டுப்புலம் நி. பர. 14¼ முதிரை நின்ற செம்பாடு நி.பர. 51,5/8 எல்லை கிழக்கு தம்பர் செல்லையாவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கும், தெற்கும் கந்தசாமிஐயர் உலகநாதனுக்கும் மறுபேருக்குமுடையவாதனம் மேற்கு ஆற்றங்கரைத் தெரு, இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், தென்னைகள், கிணறுகள், புளியமரங்கள், ஆலமரங்கள், கோவில் மடப்பள்ளி மடங்கள் அடங்கலிற் சொரியலாய்ப் பன்னிரண்டிலொரு பங்கில் அரைவாசியும் குறித்த ஆதனத்தில் கந்தசாமி ஐயரால் கட்டப்பட்ட நாலு கடைகளில் சொரியலாய் அரைவாசியும்.

கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம்
பிஸ்கால்

மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை. 23-3-1978. 8890.

ஈழநாடு
The Eelanaadu

அதிகரிக்கும் பஸ் விபத்துக்கள்

மிகப் பயங்கரமான முறையில் பஸ் விபத்துக்கள் அதிகரித்துவருவதையிட்டுக் கவலையடையாமலிருக்க முடியாது.

நேற்று முன்தினம் காலை கந்தானை-நீர்கொழும்பு டிப்போவைச் சேர்ந்த ஒரு பஸ் பாதையைவிட்டு விலகிச் சென்று நடைபாதையில் சென்றுகொண்டிருந்தவர்களில் இரண்டு பாடசாலைப் பிள்ளைகளைப் பலியெடுத்து மற்றும் ஏழு பேரைக் காயப்படுத்தி ஒரு மதிற் சுவரையும் மோதி நின்றிருக்கிறது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நாவலர் சந்திக்கருகில் பஸ்ஸின் மிதிபலகையில் பிரயாணம் செய்தவர்களில் மூன்றுபேர் மின்கம்பத்துடன் மோதிப் படுகாயமடைந்துள்ளனர்.

பஸ்விபத்துக்கள் சம்பவிக்காத நாளே நமது நாட்டில் இல்லையென்று சொல்லலாம்.

பஸ்ஸில் பிரயாணம்செய்யப் புறப்படுபவர் உயிரோடு திரும்பி வருவதும் காயமின்றித் தப்பிப் பிழைப்பதும் ஆண்டவன் கருணைதான்!

பஸ்சேவை சீராகுமென்றும் மிகச் சிறந்தமுறையில் அது நடைபெறுமென்றும் போக்குவரத்து அமைச்சர் அடிக்கடி கூறிவருகிறார்

தினமும் போக்குவரத்து அமைச்சர் ரயில்சேவைபற்றியும் பஸ் சேவை பற்றியும் உறுதிமொழிகள் அளித்துவருகிறார். அமைச்சர் சில நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறார் என்பதை மறுக்க முடியாது. ஆனால் அவர் கொடுக்கும் வாக்குறுதிகளுக்கு அவர் எடுக்கும் நடவடிக்கைகள் ஈடுகொடுப்பதாக இல்லை,

நீர்கொழும்பு டிப்போவிலிருந்து காலையில் புறப்பட்ட பஸ் பாதையை விட்டு விலகி உயிர்ப்பலி எடுப்பதானால் அந்த பஸ்ஸின் நிலைமை எப்படிப்பட்டதாக இருந்திருக்க வேண்டும்?

பஸ்களில் மிதிபலகையில் பிரயாணம் செய்கிறார்களென்றால் மகிழ்ச்சியுடன்தான் அப்படிச் செய்கிறார்களா? உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் பஸ்ஸிலும் ரயிலிலும் மிதிபலகைகளில் பிரயாணம் செய்கிறார்கள்.

உரிய நேரத்திற்கு பஸ்கள் கிடைக்கமாட்டா. பஸ்கள் வந்தாலும் ஜனக்கூட்டத்தைச் சமாளிக்கக்கூடிய அளவுக்கு பஸ்கள் இல்லை. அலுவலகங்களுக்கும் பாடசாலைகளுக்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் செல்லுவதற்காகக் காத்துநிற்கும் பிரயாணிகள் பஸ்ஸில் இடமில்லையானாலும் மிதிபலகையில் நின்றாவது போய்ச்சேரவே எத்தனிப்பார்கள். இது இயற்கை.

சேவைக்கு விடப்படும் பஸ்கள் நல்ல நிலையிலிருக்க வேண்டியது அவசியம். சேவையிலீடுபடுத்த முடியாத பஸ்களை எக்காரணம் கொண்டும் டிப்போவுக்கு வெளியே எடுத்துச்செல்ல அனுமதிக்கக்கூடாது.

பஸ்களின் தொகை அதிகரிக்கப்பட்டால்தான் மிதிபலகைப் பிரயாணத்தைத் தவிர்க்க முடியுமென்பதை அமைச்சர் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

பஸ் விபத்துக்களைத் தடுப்பதற்கு அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகமிக அவசியமாகிவிட்டது. இதுபற்றி ஒரு குழுவை நியமித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதும் நல்லது.

இலங்கையில் தமிழர்பரம்பரையையே அழித்துவிடவேண்டும்

இராணுவத்தினர் இவ்வாறு தம்மை ஏசியதாக வவனியா எம். பி. சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட் மாதம் 28-ம் திகதி அதிகாலை இரண்டே முக்கால் மணிக்கு காப்டன் செனரத் ஜீப்பில் என்னை வவனிக்குளத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு மூவர் கொல்லப்பட்டுக் கிடந்தனர். லொறி ஒன்றும் எரிக்கப்பட்டிருந்தது. பொழுது விடிந்ததும் அங்குநின்ற இராணுவத்தினர் என்னை இம்சிக்கும் முறையில் தமிழர்கள் எல்லோரையும் வெட்டிக் கொல்லவேண்டும்; தமிழர் பரம்பரையையே இலங்கையில் அழித்துவிட வேண்டும் என ஏசினர். சிறுதொலைவில் நின்ற காப்டன் செனரத்தை நான் அழைத்து இவ்விதமாக இம்சிப்பதற்காகவா நான் அழைத்து வரப்பட்டேன் என்று கேட்டேன்.

22-ம் திகதி கடைவீதிக்குச் சென்றேன் 22 வியாபார நிலையங்கள் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட காட்சியைக் கண்டேன். இதில் 17 கடைகள் எரிந்து கொண்டிருந்தன. வவனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சில்வாவும், மற்றும் பல பொலிஸ் உத்தியோகத்தர்களும் சிவில் உடையிலும் வந்து வீதி விளக்குகளைத் துப்பாக்கியால் சுட்டு கடைகளுக்கு எரிபொருள் ஊற்றித் தீவைத்து அலவாங்கு, கோடரி ஆகியவற்றினால் கடைகளை உடைத்து பொருட்களை அப்புறப்படுத்தியதை தாம் நேரில் கண்டதாக கடைச் சொந்தக்காரர்களும் சிப்பந்திகளும் என்னிடம் கூறினார்கள்:

இவ்வாறு வவனியா தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு தா. சிவசிதம்பரம் சன்சோனிக் கமிஷன் முன்னிலையில் நேற்று சாட்சியமளிக்கையில் கூறினார். அவர் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

நான் வவனியாத் தொகுதியில் ஒரு நிரந்தரப் பிரஜை, வவனியாப் பட்டினத்தில் புகையிரத வீதியில் நிரந்தரமாக வாழ்கிறேன். 1950 தொடங்கி 1965 ம் ஆண்டு வரையும், 1965 ம் ஆண்டு தொடங்கி 1970 ம் ஆண்டு வரையும் 1977 ம் ஆண்டு தொடங்கி இற்றைவரையும் வவனியாத் தொகுதியின் பிரதிநிதியாகக் கடமையாற்றுகிறேன்.

கீழ்க்காணும் ஆறு உதவி அரசாங்க அதிபர் பதவிகளைக் கொண்டதே வவனியா மாவட்டம்.

1. வவனியா தெற்கு தமிழ்ப் பிரிவு, 2 வவனியா தெற்கு சிங்களப் பிரிவு, 3. வெண்கலச் செட்டிகுளப் பிரிவு, 4. வவனியா வடக்கு தமிழ்ப் பிரிவு, 5. கரைதுரைப்பற்று, 6. புதுக்குடியிருப்பு.

வவனியா தெற்கு தமிழ்ப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழும் ஜனத்தொகையில் 90 சத விதமானோர் தமிழர். எஞ்சிய 10 வீதம் முஸ்லிம்கள், சிங்களவர்கள், இந்திய வம்சா வழியினரைக் கொண்டது. இப்பகுதியில் கோவில்குளம், மூன்று முறிப்பு ஆகிய இரண்டு நகராண்மைக் கழக வட்டாரங்களில் மாத்திரம்தான் சிறு தொகையினரான சிங்கள மக்கள் வாழ்கிறார்கள்.

வவனியா தெற்கு சிங்கள உதவி அரசாங்க அதிபரின் பிரிவு. வவனியா மாவட்டத்திற்கும் வட மத்திய மாகாணத்திற்கும் எல்லையான பிரப்பமடு தொடங்கி மருதமடு வரையிலான ஒரு நீளமான எல்லைக் கோடாக அமைகின்றது. இந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய சின்னக்குளம் என்ற ஒரு கிராமம் தமிழ் மக்கள் வாழ்கின்ற கிராமமாக இருக்கின்றது. இதைவிட மாமடுவ என்ற சிங்கள கிராமத்தில் ஐந்து ஆறு தமிழ்க் குடும்பங்கள் வாழ்கின்றன.

கீழ்க் காணும் 16 தமிழ்க் கிராமங்களும் சிங்களக் கிராமங்களுக்கு அண்மையிலும் அவையின் நடுவே பின்னிப் பிணைந்தும் அமைந்திருக்கின்றன.

1. கள்ளிக்குளம், 2. வீமன்கல்லு. 3. கறுவல் புளியங்குளம், 4. காத்தார் சின்னக்குளம், 5. ஆசிகுளம், 6. கோமரசங்குளம், 7. கல்நாட்டினகுளம், 8. தச்சன்குளம், 9. மூன்று முறிப்பு, 10. கோவில்புதுக்குளம், 11. பேயாடிகூளாங்குளம், 12. மாகாறம்பைக்குளம், 13. புதிய சின்னக்குளம், 14 கோவில் குளம், 15. கல்வீரங்குளம், 16. நொச்சிமோட்டை.

கீழ்க்காணும் சிங்களக் கிராமங்கள் ஏழும் தமிழ்க் கிராமங்கள் ஊடே அமைந்துள்ளன.

1. கொக்கு வெளியே, 2. நெடுங்குளம், 3. அம்பலாங்கொடல, 4. மாமடுவ, 5. மாமகிழங்குளம், 6. மடுக்கந்த, 7. ஈரப் பெரியகுளம்.

“யூனிபோம் அணிந்த-அணியாத பொலிசார் கடைகளை தீயிட்டுக் கொள்ளை”

பாவற்குளம் குடியேற்றத் திட்டம் 1952 ம் ஆண்டு உருவாகியது. இதைத் தவிர்ந்த மற்றக் கிராமங்களில் வாழும் சிங்கள மக்கள் தொன்றுதொட்டு பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவருகிறார்கள். இங்கு வாழ்கின்ற தமிழ் சிங் மக்களினிடையே அன்புப் பிணைப்பும். சௌஜன்னியமும் நீடித்து இருந்திருக்கின்றது. 1958 ம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற இனக் கலவரத்தின்போது எந்த வித அசம்பாவிதமும் வவனியாப் பகுதியில் நடைபெறாதமை இப் பகுதியில் நிலவி வந்த ஒரு ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது.

வவனியா பட்டினம்

வவனியாத் தொகுதியின் தலைப் பட்டினமாக வவுனியாப் பட்டினம் இருக்கிறது. இங்கு வாழ்கின்ற மக்களில் 98% தமிழர்கள். எஞ்சியவர்கள் முஸ்லீம்களும், சிங்கள மக்களும், திருமலை, மன்னார், யாழ்ப்பாணம், அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் உடைய பிரதான வீதி சந்திக்கும் ஒரு சந்தியாக வவனியாப் பட்டினம் அமைகின்றது. வவனியாப் பட்டினத்தின் கடைவீதி வவனியாப் பொலிஸ் நிலையத்தைச் சூழ அமைந்திருக்கின்றது. கச்சேரி, அரசாங்க அதிபரின் வாசஸ்தலம் இவை எல்லாம் கடைவீதிக்கு அண்மையிலேயே அமைந்திருக்கின்றன.

சேதத்துக்குள்ளாகிய வியாபார நிலையங்களையும் பொலிஸ் நிலையம் போன்று மற்றும் முக்கிய நிலையங்களையும் அடையாளம் இட்ட வவனியாப் படத்தின் வரை படம் ஒன்றை திரு. சிவசிதம்பரம் சமர்ப்பித்தார்,

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:-

பறத்தமிழர்கள் அகற்றப்படவேண்டும்

77-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதி வவனியாப் பட்டினத்தில் ஒரு தமிழ் தொழிலாளிக்கும், ஒரு சிங்கள மகனுக்கும் இடையில் ஒரு சிறிய பிரச்னை ஏற்பட்டது. இதையடுத்து வவனியா பொலிஸ் நிலைய அதிபர் திரு. ரி. என். டி. சில்வா உட்பட வேறும் சில சிங்கள பொலிஸ் உத்தியோகத்தரால் . வவனியாக் கடை வீதியில் உள்ள வர்த்தகர்கள் சிப்பந்திகள் பாரதூரமாகத் தாக்கப்பட்டார்கள். தாக்கப்பட்டது மாத்திரமன்றி இனத்துவேஷமாக வகுப்புவாதமான கிளர்ச்சி விளைவிக்கக்கூடிய வார்த்தைகளினால் இம்சிக்கப்பட்டார்கள். அவர்கள் பிரயோகித்த வார்த்தைகளாவன ‘வவனியாவில் இருந்து பறைத் தமிழர்கள் அகற்றப்படவேண்டும் அடியுங்கள் இந்தப் பறத் தமிழர்களை ஓட ஓட’’—இந்த வார்த்தைகளினாலும் அடி உதையினாலும் மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டது இதன் விளைவாக அடுத்த நாள் வவனியாக் கடைவீதி கடைகள் எல்லாம் பூட்டப்பட்டு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.மக்கள் எனக்கு முறையீடு செய்தார்கள். நான் வவனியாப் பொலிஸ் சுப்பிறின்டனுக்கு முறையிடு செய்தேன் சம்பந்தப்பட்டவர்கள் அழைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. சிலரின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டதும் வவனியாப் பொலிஸ் நிலைய அதிகாரி ரி. என். டி. சில்வா அங்கு சமூகம் கொடுத்தார். சமரச தீர்வு காணப்பட்டது திரு சில்வா நடந்தவற்றிற்குத் தாம் மனஸ்தாபப்படுவதாகவும் இந்தவிதமான சம்பவங்கள் மீண்டும் நடக்காது என தாம் உத்தரவாதம் அளிப்பதாகவும் கூறினார் விசாரணை செய்யப்பட்டதற்கு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டதற்கும் அத்தாட்சிகள் வவனியா பொலிஸ் சுப்பரின்டனிடம் உண்டு ஓர் துண்டுப் பிரசுரத்தை இது சம்பந்தமாக முக்கியமான ஐந்து பிரமுகர்கள் கைச்சாத்திட்டு வெளியிட்டார்கள். அதன் பிரதியை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

16-6-77ல் வவனியாப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய ஏழு தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் திடீர் இடமாற்றம் பெற்றார்கள். நான் விசாரித்த அளவில் எந்தக் குற்றம் பிடித்ததாலும் குறித்து இடமாற்றத்திற்கு ஆளாகவில்லை. இந்த இடமாற்றத்தின் பின் வவனியாப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுகின்ற தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர்களுடைய எண்ணிக்கை 15 ஆகக் குறைக்கப்பட்டது. சிங்கள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 121 ஆக அதிகரிக்கப்பட்டது.

ஆகஸ்ட் இனக்கலவரம்

யாழ்ப்பாணத்தில் சென். பற்றிக்ஸ் பாடசாலையில் நடைபெற்ற களியாட்ட விழாவில் பொதுமக்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் நடைபெற்ற ஒரு மோதலின் காரணமாக யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் சிலர் உயிர் இழந்தார்கள் எனவும், பல வியாபார நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டன என்றும் நான் 14-7 77ம் திகதி அறிந்தேன்.

அகதிகள் வந்தனர்

16-ந் திகதி காங்கேசன்துறையில் இருந்து கொழும்புக்கும் கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கும் சென்ற இரவுப் புகைவண்டிகள் இரண்டும் அனுராதபுரத்தில் நிறுத்தப்பட்ட பொழுது தமிழ்ப் பிரயாணிகள் பாரதூரமாகத் தாக்கப்பட்டார்கள் என்ற செய்தி 17ம் திகதி எனக்குக் கிடைத்தது. ஆரம்பத்தில் சிறு தொகையினராக அனுராதபுரப் பட்டின எல்லைக்குள் வாழ்ந்த தமிழ்மக்கள் அகதிக

(4-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

பிறருக்கு நன்மை செய்யும் பொழுதுகூட அந்நன்மையைப் பெறுபவர்களின் குண இயல்பை அறிந்துசெய்யவேண்டும். இல்லையேல் அதுவும் பெரும் தீமையைத் தரும்.

—திருவள்ளுவர்

சாந்தி
இன்று மட்டும்
(யாழ். நகர்) போன்: 7648.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஆனந்தன்...லீலா...எம். ஆர். ராதா...நாகேஷ்...மனோரமா
— புதிய பிரதி —
நாகமலை அழகி
நடனங்கள் கலரில்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி—சாவித்திரி
நடித்த
கொஞ்சும் சலங்கை
(டெக்னிக் கலர்)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி. கே. ஆர். விஜயா
நாகேஷ் நடித்த
சின்னஞ்சிறு உலகம்
(புதிய பிரதி)

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்: ஜி. ஆர்:--வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

Rio Jaffna (Phone:7607)
Daily 10-30 a. m. 4-45. 7-00 and 9-45 p.m
Elizabeth, Ashley, Joe, Don Baker,
JimKelly
in
GOLDEN NEEDLES
(ஒரு பெண்ணின் கராட்டிச் சண்டை பிரமாதம்)
Color (Advance Booking for Families Accepted) Scope

வின்ஸா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா,
விஜயகுமார்-நிர்மலா, அசோகன், மனோரமா
நடித்த
K. R. G. பிக்சர்ஸ்
ஜானகி சபதம்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ
(யாழ். நகர்)
போன் 7698
முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
உறவு சொல்ல ஒருவன்

கடைசி
ராணி
(யாழ். நகர்)
இரு தினங்கள் மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் - ஜெய்சித்திரா
நடித்த
பணக்கார பெண்
31-ம் திகதி முதல்
வாடைக்காற்று

2nd Crowded week
2வது ஜனத்திரள் வாரம்
Regal (Jaffna) Daily 4-30, 7-00 and 9-30 p.m.
Starring Three of the World's Most Popular Actors
MICHAEL CAINE, DONALD SUTHERLAND.
ROBERT DUVALL
Daring attempt by a group of German
Paratroopers to Kidnap Britain's Wartime
Prime Minister, Winston Churchill
THE EAGLE HAS LANDED
(Color-War film)

இலங்கையில் தமிழர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாக வவனியாவிற்கு வந்தனர். இதை அடுத்து தினமும் பல ஆயிரக்கணக்கான அகதிகள் வடமத்திய மாகாணத்தில் இருந்து வவனியாவிற்கு பஸ்மூலம் அனுப்பப்பட்டார்கள். இவர்களை ஆதரிக்குமுகமாக வவனியா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் ஓர் அகதிகள் முகாமை நிறுவினேம், இவர்களுக்கு உணவு மற்றைய வசதிகளைக் கொடுப்பதற்காகத் தொண்டர்களை ஒழுங்குசெய்து கொடுத்தேன். கிளிநொச்சி, யாழ்ப்பாணம் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அதிகாரிகளைத் தொடர்புகொண்டு பஸ் மூலம் அகதிகளைக் கிளிநொச்சிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் அனுப்பினேன்.

கடை எரிந்தது

18ந் திகதி தென் பகுதியில் இருந்து பல ஆயிரக்கணக்கான அகதிகள் வவனியாவில் வந்து குவிந்தார்கள் இவர்களுடைய சௌகரியங்களை அரசாங்க அதிபரின் தொடர்புடன் கவனித்தேன் அன்று பிற்பகல் ஏழு மணியளவில் அகதிகளுக்கு உணவு ஒழுங்கு செய்துகொண்டு வவனியா கடை வீதியிலிருக்கும்பொழுது கொறவப்பொத்தானை வீதியில் உள்ள ஒரு ஒரு சிறிய கடை தீப்பற்றி எரிவதாகக் கேள்விப்பட்டு உடன் விரைந்தேன். நான் சென்றபொழுது பொலிஸ் உத்தியோகத்தர்களும். பொதுமக்களும் நின்றனர். கடை முற்றாக எரிந்துவிட்டது.

பொலிஸ் அதிபர் முன் பொலிஸார் தாக்கினர்

19ந் திகதி காலை பொலிஸ் உத்தியோகத்தர் விக்கிரமசூரியா, மெண்டிஸ் இன்னும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் அகதிகள் முகாமில் கடமைசெய்த தொண்டர்களைத் தாக்குவதாகத் தொலைபேசி மூலம் அறிவித்தார்கள். தாக்கப்படும்வேளை பொலிஸ் சுப்பிரிண்டன் செனரத்தும் அந்த இடத்திலேயே நின்றாரெனத் தகவல் தந்தார்கள். நான் உடனடியாக அங்கு விரைந்தேன் நான் சென்றபொழுது அதிகாரிகளும் மற்றும் பொதுமக்களும் மேற்குறித்த பொலிஸார் அகதிகள் முகாமில் வைத்துத் தங்களுக்கு அடித்தார்கள் என முறையிட்டார்கள். இவ்வேளை திருவாளர்கள் டேவிட், நாகநாதனும், சட்டத்தரணி ஐ. வேதீஸ்வரனும் என்னிடம் வந்து, அகதிகளாக வந்தவர்களை பஸ்நிலையத்திலும், பகிரங்கப் பாதையிலும் வைத்துப் பொலிசார் தாக்குகின்றனர் என்று முறையிட்டார்கள். நான் உடனடியாகப் பஸ்நிலையத்திற்குவிரைந்தேன். மக்கள் எல்லாரும் பீதியடைந்தவர்களாகக் கடைக்குள் தஞ்சம் புகுந்து நின்றார்கள். பொலிஸ் உத்தியோகத்தர்களைக் காணவில்லை. உடனடியாகத் தொலைபேசியில் பொலிஸ் சுப்பிரிண்டனுடன் தொடர்புகொண்டு நடந்தவற்றைக் கூறி, இவ்விதமான அட்டூழியங்களை உடனடியாக நிறுத்தும்படி கேட்டுக்கொண்டேன் இந்த நிகழ்ச்சியின் பின் தெற்கில் இருந்துவரும் அகதிகளை வவனியா அகதிகள் முகாமில் நிறுத்திவையாமல் முடிந்த அளவு கிளிநொச்சிக்கும் மற்றைய இடங்களுக்கும் அனுப்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

தவறுதலான ஊரடங்குச் சட்டம்

அதே தினம் பிற்பகல் ஒரு மணியளவில் பொலிஸ் ஜீப் வண்டி ஒன்றில் ஒலிபெருக்கி இணைக்கப்பட்டு அன்று இரண்டு மணி தொடக்கம் அடுத்த நாள் காலை ஐந்து மணி வரை வவனியாப் பட்டின எல்லைக்குள் ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதெனவும் பொது மக்களைத் தங்கள் இல்லங்களை விட்டு வெளியேறப்படாதெனவும்பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் கொடுத்தார். இது முறையற்ற ஊரடங்குச் சட்டம் என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டது. பொலிஸ் சுப்பிரிண்டனுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு விசாரணை செய்தேன். முறையான ஊரடங்குச் சட்டம் அல்லாதபோதிலும்வவனியாப் பட்டினத்தின் பாதுகாப்பிற்காகக் குறித்த நடவடிக்கையை தான் மேற்கொள்வதாகச் சுப்பிரிண்டன் எனக்குக்கூறினர்.

சந்தை தீப்பற்றியது

அதேதினம் பிற்பகல் எட்டு மணியளவில் வவனியா கிழமைச் சந்தை தீப்பற்றி எரிவதாக அறிவித்தல் கிடைத்தது. குறித்த கிழமைச் சந்தையில் ஐம்பதுக்கு மேற்பட்ட சிறுசிறு வர்த்தக நிலையங்கள் உண்டு. உடனடியாக அங்கு விரைந்தேன். நான் சென்றபொழுது முழுச் சந்தையும் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. சந்தைக்கு இரு மருங்கிலும் உள்ள பள்ளிவாசல் சந்தியிலும் குடியிருப்புச் சந்தியிலும் ஆயுதம் தாங்கிய பொலிஸார் ஒரு சந்திக்கு இருவராகக் காவல்புரிந்துகொண்டிருந்தார்கள். அன்று பகல் முழுவதும் தீப்பற்றி எரியும்பொழுதும் சந்தையின் வியாபாரிகளையும், அவர்களது குடும்பத்தினரையும் அகதிகள் முகாமிற்கு அனுப்பிவைத்தேன்.

கறுவல் புளியங்குளச் சம்பவம்

20ந் திகதி பிற்பகல் ஐந்து மணி தொடக்கம் இருபத்திரண்டாம் திகதி அதிகாலை நாலு மணிவரை ஊரடங்குச் சட்டம் தொடர்ச்சியாக அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டது. அன்று கறுவல் புளியங்குளம் வாசியான ஏ. மனோகரன் என்பவர் என்னிடம் வந்து மடுக்கந்தை வாசியான ரூபசிங்க என்பவரும், அவரது சகோதரனும் இன்னும் பலரும் தங்களுடைய கிராமத்திற்குத் துப்பாக்கியுடன் வந்து தங்களுடைய கிராமத்தில் உள்ள திருவாளர் கணபதிப்பிள்ளை, பாலசிங்கம் என்பவர்களைப் பயமுறுத்தி அவர்களது துப்பாக்கி இரண்டையும் பறித்துச் சென்றுவிட்டனரென்று முறையிட்டனர். தொலைபேசி மூலம் வவனியாப் பொலிஸ் நிலைய அதிகாரியுடன் தொடர்புகொண்டு உடனடியாக இது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கூறினேன். பாதிக்கப்பட்டவர்களைப் பொலிஸ்நிலையத்திற்குஅனுப்பிவைத்தேன். அவர்கள் அங்கு சென்று முறைப்பாடு கொடுத்தார்கள். ஆனால் பொலிசார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அன்று பகல் வவனியாப் பட்டினத்தில் வேறெந்தவிதநிகழ்ச்சியும்நடக்கவில்லை. ஆனால் கிழமைச் சந்தைக்குத் தீ வைத்து எரித்தது பொலிசாரே என்ற பரபரப்பு வவனியாவில் உருவாகியது. மக்கள் பீதியடைந்தார்கள். மாவட்ட அதிபரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு விஷயத்தை மாவட்ட அதிபருக்கு விளக்கி காவலை உஷாராக்கும்படி கேட்டுக்கொண்டேன்;

அன்று இரவு ஒரு மணியளவில் வவனியாக் கடைவீதியில் உள்ள காசிப்பிள்ளையின் வியாபாரநிலையத்திலிருந்து திரு. காசிப்பிள்ளை என்பவர் தொலைபேசியில் என்னுடன் தொடர்புகொண்டார். அவர் மிகவும் பீதியடைந்த நிலையில் என்னுடன் பேசினார். தங்களது வியாபாரநிலையத்திற்கு முன் உள்ள தேன்சுரபி என்று அழைக்கப்படும் சிற்றுண்டிச்சாலையை பொலிசாரும், பொலிஸ் உடையில் இல்லாத பொலிஸ் உத்தியோகத்தர்களும் தீ வைக்கின்றார்கள்; உடைக்கின்றார்கள், உடைத்த பொருட்களை எடுக்கின்றார்கள் என எனக்குக் கூறினர். உடனடியாக பொலிஸ்சுப்பிரிண்டனுக்குத் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டேன் அங்கு ஒருவருடனும் தொடர்புகொள்ளமுடியவில்லை. மாவட்ட அதிபரைத் தொடர்புகொண்டேன். அவர்தான் இராணுவத்தினருடன் தொடர்புகொண்டு உடனடியாக வேண்டிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறினர். பொலிஸ் அலுவலகத்தைத் தொடர்புகொண்டேன். அங்கு என்னுடன் பேசியவர் இரண்டொரு தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தவிர ஏனையோர் எல்லாம் கடைவீதிக்குத்தான் சென்றுவிட்டார்கள் என்றார். நிலைய அதிகாரியும் கடைவீதிக்குத்தான் சென்றுவிட்டதாக கூறினார். ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்தபடியால் என்னால் கடைவீதிக்குச் செல்லமுடியவில்லை.

அதேவேளை இம்பால் ஒட்டல், திரு. குலசிங்கத்தின் வியாபாரநிலையம் இவையிரண்டும் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டதென அறிந்தேன். இருபத்தியோராம் திகதி காலை தேன்சுரபி இம்பால் ஒட்டல்வியாபாரநிலையச் சொந்தக்காரர்களையும் சிப்பந்திகளையும் நேரடியாகச் சந்தித்தேன். விபரங்களை அறிந்ததும் வவனியாப் பொலிஸ் சுப்பிரிண்டனுடன் தொடர்புகொண்டு பாதிக்கப்பட்டவர்களுடைய விசாரணைகளை நடாத்துவதற்கு உடனடியாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கும்படி கேட்டேன். உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் நாதனை குறித்த விசாரணைக்குதான் நியமித்திருப்பதாக சுப்பிரிண்டன் எனக்குக்

(5-ம் பக்கம் பார்க்க)

பலஸ்தீனருக்கு...

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் திரு. வைஸ்மன் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனர்கள் தமது தாக்குதலை தீவிரப்படுத்தினால் 24 மணி நேரத்தில் தென் லெபனானில் இஸ்ரேலிய குடியேற்றங்களை அமைக்கவும் இஸ்ரேல் தயாராக உள்ளது என்றும் திரு. வைஸ்மன் கூறினார். (இ)

8-வது வாரம்
புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45.
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த் -ஸ்ரீதேவி
மூன்று முடிச்சு

வெல்லி
(சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
கணேசன்—சுபாஷினி
நான் உங்கள்
தோழன்

நாகம்ஸ்
(கல்லுவம்)
தினசரி 6-45, 10-00
எம். ஜி. ஆர். — லதா
நடித்த
நினைத்ததை
முடிப்பவன்

இலங்கையில் தமிழர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறினர்.

சப்இன்ஸ்பெக்டர் நாதனுக்கு திடீர் இடமாற்றம்

சப் இன்ஸ்பெக்டர் நாதன் விசாரணையைத் தொடங்கி வாக்குமூலங்களைப் பதிவுசெய்தார் என்பதை நான் அறிவேன். ஆனால் குறித்த விசாரணை பூரணமாக நிறைவேற்றப்படுமுன் சப்இன்ஸ்பெக்டர் நாதனுக்கு கேகாலைக்கு மாற்றக்கட்டளை வந்தது. குறித்த விசாரணையை முற்றாக நிறைவேற்றுவதற்கு முன் குறித்த உத்தியோகத்தரை மாற்றக்கூடாதென டி ஐ ஜி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி இவர்களுக்கு தந்திமூலமும் கடிதம் மூலமும் நேரடியாகவும் வேண்டுகோள் விடுத்தேன். எனது வேண்டுகோள் எதுவும் பயன் அடையவில்லை. சப்இன்ஸ்பெக்டர் நாதன் இடமாற்றக் கட்டளைக்கு உள்ளாகி இருக்கின்றார். குறித்த விசாரணையைத் தொடர்ந்து நடத்துவதற்கு வேறு எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை இதுசம்பந்தமாகவிசாரணையை வவுனியா அரசாங்க அதிபரையும், வவுனியாவிற்கு இணைப்பு அதிகாரியாகக் கடமை ஏற்ற திரு. அல்விசையும் நேரடியாக தொடர்புகொண்டு வவுனியா பொலிசாரின் நடவடிக்கைகள் மிகவும் ஒழுங்கற்றமுறையில் நடைபெறுகிறதெனவும் இவர்களினாலேயே விபரீதங்கள் நடைபெறுகிறதெனவும் இறுக்கமாகச் சுட்டிக்காட்டி வவனியாப் பொலிசாரை நகரப்புறத்திலும், கிராமப்புறங்களுக்கும் காவலுக்கு அனுப்புவதை உடனடியாக நிறுத்தும்படியும் கேட்டுக்கொண்டேன். இதுசம்பந்தமாக நான் தொடர்புகொண்ட கடிதத்தின் பிரதிகள் இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்

பொலிசார் மீது நம்பிக்கை இழந்துவிட்டோம்

21ம் திகதி காலை சுற்றுப்புறத்தில் உள்ள கிராமங்களில் கொள்ளை, தீ வைப்பு போன்றவை நடைபெறுகின்றதாக அறிவிப்புக் கிடைத்தது. இணைப்பதிகாரியுடன் தொடர்புகொண்டு நானும், பொதுமக்களும் வவனியா பொலிசார் மேல் முற்றாக நம்பிக்கை இழந்துவிட்டதாகவும் இப்பகுதியில் நடைபெறுகின்ற அநீதிகளைத் தடுக்கவேவேண்டுமானால் பொலிசாரை காவலுக்கு அனுப்புவதை உடனடியாக நிறுத்தவேண்டுமெனவும் கிராமப்புறங்களுக்கு இராணுவத்தினரை ரோந்துசெல்வதற்கு அனுப்பிவைக்கவேண்டுமெனவும் வலியுறுத்தினேன். இராணுவத்தினர் ரோந்து செய்யவேண்டிய முக்கியமான வீதிகளை ஒருவரைபடத்தில் கீறி அவரிடம் கொடுத்தேன். கடிதம் மூலமாக நான் இணைப்பதிகாரிக்கு விடுத்த வேண்டுகோளின் பிரதி ஒன்றை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

இதேதினம் நடுச்சாமம் வவனியாக் கடைவீதித் திசையில் பல துவக்குவெடிச்சத்தங்கள் எனக்கு கேட்டன. இதையடுத்து சில வியாபாரநிலையங்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டேன். இவர்கள் எல்லாம் வவனியாக் கடைவீதி ஒரே தீமயமாகக் காட்சியளிக்கிறதென்றும் வெடிகள் நாலுபக்கத்திலும் கேட்கின்றது என்றும் பீதியுடன் எனக்குச் சொன்னார்கள். பொலிசார் இராணுவத்தினர் அங்கு இல்லையா என்று கேட்டதற்கு பொலிசாரேதான் உடைக்கின்றார்கள், தீவைக்கின்றார்கள் என்று எனக்குக் கூறினர்.

தடையை மீறினால் சுடுவோம் என்றது இராணுவம்

உடனடியாக எனது ஜீப் வண்டியில் திரு. டேவிட் நாகநாதனையும், எனக்கு துணைக்கு அழைத்துக்கொண்டு கடைவீதியை நோக்கிச்சென்றேன். கச்சேரிச்சந்தியில் வைத்து இராணுவத்தினர் என்னை மேற்கொண்டு நகரமுடியாது தடுத்துவிட்டார்கள். கட்டளையை மீறிச்சென்றால் எம்மைச் சுடுவதற்கும் தங்களுக்கு அதிகாரம் இருக்கிறதென்று என்னைத் தடுத்தார்கள். நான் திரும்பி வீடு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

இருபத்திரண்டாம் திகதி அதிகாலை கடைவீதிக்குச்சென்றேன். இருபத்திரண்டு வியாபார நிலையங்கள் உடைக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்ட காட்சியைக்கண்டேன். இதில் பதினேழு கடைகள் எரிந்து கொண்டேயிருந்தன. கடைச் சொந்தக்காரர்களையும், இப்பந்திகளையும் விசாரித்தேன். அவர்கள் வவனியாப்பொலிஸ் நிலைய அதிகாரி சி. என். டி. சில்வா உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மென்டிஸ், மகிந்தா விக்கிரமசூரியா இன்னும் பல பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிவில் உடையிலும் வந்து வீதி விளக்குகளுக்குத் துப்பாக்கிகளால் சுட்டு, கடைகளுக்கு எரிபொருள் ஊற்றித் தீவைத்து அலவாங்கு, கோடரி இவற்றினால் கடைகளை உடைத்துப் பொருட்களை அப்புறப்படுத்தியதை தாங்கள் நேரடியாகக் கண்டதாக எனக்குக் கூறினர். இதேவேளை இராணுவத்தினர் எவரையும் தாங்கள் கடைவீதியில் காணவில்லை எனக்கூறினர்.

எஸ். ஐ கந்தசாமி சுடமுயன்றதை ஓ ஐ சி தடுத்தார்

இம்பாலா ஓட்டல் உரிமையாளர் திரு. நல்லைநாதன், இராஜலக்ஷ்மி நகைமாளிகையைக் கொள்ளையடிக்கும் பொழுது தான் மிகவும் அண்மையில் நின்றதாகக் கூறினார். அதேவேளை இன்ஸ்பெக்டர் கந்தசாமி அந்த இடத்திற்கு வந்து தங்களிடம் டோர்ச்லைற் வாங்கி கடைக்குள் பார்த்துவிட்டு அண்மையில் நின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களை உதவிக்கு அழைத்ததாகவும், எவரும் வராததினால் திரு. கந்தசாமி தன் கையிலிருந்த துப்பாக்கியினால் நின்றவர்களுக்குக் குறிவைக்க எத்தனிக்கும் வேளையில் பொலிஸ்நிலைய அதிகாரி சில்வா அவரைச்சுடவேண்டாம் எனத் தடுத்து நிறுத்தியதாகவும் அவ்வேளை தப்பியோடுவதற்கு முயற்சி செய்த ரூபசிங்கா என்பவரைத் திரு. கந்தசாமி வலது கையினால் பிடித்ததாகவும் ஆனால் கடையினுள் இருந்து வெளியே வந்த இன்னொருவர் திரு. கந்தசாமியின் கையிலிருந்த துவக்கையும், அவரின் கைப்பிடியில் இருந்து ரூபசிங்காவையும் விடுவித்துக் கொண்டுஓடியதாகவும், இவையத்தனையும் நடக்கும் பொழுது மிக அண்மையில் நின்ற வவனியாப் பொலிஸ் நிலைய அதிகாரி சில்வாவோ அல்லது மற்றப் பொலிஸ் உத்தியோகத்தர்களோ எந்த உதவியையும் திரு. கந்தசாமிக்குக் கொடுக்கவில்லையென்பதையும் திரு. நல்லநாதன் எனக்குக்கூறினார்.

மற்றும்பலர் தாங்கள் நேரடியாகக் கண்டவற்றை எனக்குக் கூறினார்கள். பாதிக்கப்பட்டவர்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு இணைப்பு அதிகாரி திரு. அல்விசை நேரடியாகச் சந்தித்தேன். இணைப்பு அதிகாரியையும் கூட்டிச் சென்று கடைவீதியில் நடந்த அத்தனையையும் காட்டினேன். பாதிக்கப்பட்டவர்கள் பொலிசாருக்கு முறையிடுசெய்வதற்கு பேசமறுக்கின்றார்கள் என்றும், அவர்களது முறையீட்டை இராணுவ அதிகாரி ஒருவரைக் கொண்டு பதிவுசெய்யும்படியும் கேட்டேன். இதற்கு இணங்கிய இணைப்பு அதிகாரி தனது காரியாலயத்தில் தனது இரண்டாவது உத்தியோகத்தரை வாக்குமூலங்களை பதிவு செய்ய நியமித்தார். ஒரு சிலரின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன. நான் எனது வீட்டில் இருக்கும்பொழுது காலை பத்தரைமணிக்கு தொலைபேசியில் இணைப்பு அதிகாரி திரு அல்விஸ் தொடர்புகொண்டு தனது மேலதிகாரிகளிடம் இருந்து தனக்குக்கட்டளை வந்திருப்பதாகவும், பாதிக்கப்பட்டவர்களுடைய வாக்கு மூலங்களை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே பதிவுசெய்யவேண்டுமெனவும், இதற்காகத்தான் இன்ஸ்பெக்டர் மோயதீன் என்பவரை வாக்கு மூலங்களைப் பதிவுசெய்வதற்கு நியமித்திருப்பதாகவும் எனக்கு அறிவித்தார். வாக்கு மூலம் கொடுக்கச் சென்றவர்கள் திருப்தியான முறையில் வாக்குமூலங்களைப் பதிவுசெய்யவில்லை என முறையிட்டனர். இதையடுத்து பாதிக்கப்பட்டவர்களை சத்தியக்கடுதாசிகள் மூலம் தங்களுடைய முறையீடுகளை எனக்குத் தரும்படிகேட்டேன். பத்துக்கு மேற்பட்ட சத்தியக்கடுதாசிகள் எனக்குக் கிடைத்தன. இவற்றை கொழும்பில் நின்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்திற்கு அனுப்பி வைத்தேன் அவர் அவற்றை பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் கையளித்து முறையீடு செய்தார் என்பதை நான் அறிவேன்.

கிராமப்புறங்களில் நடந்தவை

இருபத்திரண்டாம் திகதி காலை சிங்களக் கிராமங்களுக்கு மத்தியிலேஉள்ள கல்நாட்டின் கிராமங்களுக்கு ஒருகொள்ளைக் கூட்டத்தினர் பல வீடுகளுக்குத் தீ வைத்துக் கொள்ளை அடித்ததாகவும், கிராமத்தவர்கள் முயன்றவரை தடுத்தும் பயன்அடையவில்லையெனவும், அறிந்தேன். இச்சமயத்தில் திரு. செபஸ்தியாம்பிள்ளை என்பவர் கொள்ளைக்கூட்டத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமுற்று வவனியா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.

தச்சன்குளக் கிராமப்பகுதியில் பல வீடுகள் கொள்ளைக் கூட்டத்தினரால் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. கத்திவெட்டுக்காயத்துடன் அவ்வூர்வாசி ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

வெளிக்குளத்தில் பல வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. மூன்றுமுறிப்புப் பகுதியில் பல வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டன. மக்கள் கண்டி வீதியில் உள்ள இருப்பச் தோட்டத்தில் தஞ்சம் புகுந்திருந்தார்கள்.

இரவும் பகலும் வீடு கொள்ளை

மாமடுவ என்ற கிராமத்தில் இளைப்பாறிய அதிபர் திரு. சுப்பிரமணியம் என்பவருடைய வீடு தாக்கப்பட்டு, அன்னாரின் மகனும், மருமகனும் துப்பாக்கிச்சூட்டுக்காயத்துடன் யாழ்ப்பாண மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டார்கள், திரு. சுப்பிரமணியத்தின் வீடு பகலிலும், இரவிலும் கொள்ளையடிக்கப்பட்டு ஈற்றில் தீக்கிரையாக்கப்பட்டது.

கறுவல் புளியங்குளம் கிராமத்தில் உள்ள வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டன. இங்குள்ளவர்கள் அத்தனைபேரும் இத்தக் கிராமத்தையே விட்டு வேறு இடங்களில் தஞ்சம்புகுந்துள்ளார்கள். கறுவல் புளியங்குளத்தை அடுத்து, காத்தார் சின்னக்குளம், மாறம்பைக்குளம் இரண்டும் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. இரவில் மட்டுமன்றி பகலிலும் வீடுகளின் ஜன்னல்கள், கதவுகள் நிலைகள் இவற்றை சிங்கள மக்கள் உடைத்து எடுத்துச் சென்றுள்ளனர்கள் ஆதிகுளம், பேயாடிகளரக்குளம், வீமடு கல்லு, கள்ளிக்குளம் ஆகிய கிராமங்களிலும் பல வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது வீமன் கல்லுக் கிராமத்தில் முழு வீடுகளும் இரவிலும், பகலிலும் கொள்ளையடிக்கப்பட்டு இக் கிராமமே முற்றாக நாசமாக்கப்பட்டது.

கிராமப்புறங்களில் நடைபெற்ற அத்தனை விடையங்களையும் தினம், தினம் இணைப்பு அதிகாரியுடன் நேரடியாகவும், கடிதம் மூலமும் முறையீடு செய்துள்ளேன். இக் கிராமங்களில் உள்ளவர்கள் பலர் பொலிசாரிடம் நேரடியாகக் கொள்ளையடிக்கும் பொழுது தாங்கள்கண்ட விடயங்களில் பலரின் பெயரை முறையிடு செய்துள்ளார். இற்றைவரை எவரிலும் வவனியாப் பொலிசார் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். முறைப்பாடுசெய்ய பொலிஸ் நிலையத்திற்கு சென்றவர்களை அங்குள்ள சிங்களப் பொலிசார் கண்ணியமற்ற முறையில்பேசி வெளியில் துரத்தியுள்ளார். அப்பாவிப் பொதுமக்கள் வீதிகளில் பொலிசாராலும், இராணுவத்தினராலும் தலைமுடி வெட்டப்பட்டு அடிக்கப்பட்டு உதைக்கப்பட்டு அவர்களது துவிச்சக்கரவண்டிகள் அடித்து நொறுக்கப்பட்டு பல இம்சைக்குள்ளாகி இருக்கிறார்கள்.

அனுமதி இல்லாத ஜீப்வண்டிகள் நடமாட்டம்

பேயாடி கூளாக்குளம் என்னும் கிராமத்தில் வீடுகள் தீக்கிரையாக்கப்படுவதற்கு ஒரு சில நிமிடங்களுக்குள் குறித்த கிராமத்திற்கும் அண்மையில் உள்ள கொக்கு வெளிய என்னும் கிராமத்திற்கும் பல முறைகள் வவனியாவில் இருந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் போய்வந்து கொண்டிருந்த ஜீப் வண்டிகளின் இலக்கத்தை இணைப்பதிகாரியிடம் நேரடியாகக் கொடுத்தேன்.

இணைப்பு அதிகாரியும் நடவடிக்கை எடுக்கவில்லை

குறித்த ஜீப் வண்டியை காவலுக்காக தான் எவரிடமும் கொடுக்கவில்லை என்று அவர் ஒத்துக்கொண்டார். இதுபற்றி மேல் விசாரணை செய்யும்படி கேட்டேன். ஆனால் இதுவரை எதுவும் நடக்கவில்லை.

வவனியாவில் இருந்து பத்து மைல்களுக்கப்பால் உள்ள பூவரசங்குளம் கிராமத்தில் உள்ள இளைப்பாறிய அஞ்சலக அதிபர் கந்தையாவும் அவரது வயோதிப தந்தையும் எந்தவித காரணமுமின்றி வவனியாப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த வெதவெல என்பவரும் அவருடன் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களும் மிருகத்தனமாக தாக்கினார்கள். இதன் விளைவாக திரு கந்தையாவின் அலகு எலும்பு உடைந்து கடுமையாகக் காயம் உற்றார் அவரின் வயோதிபத் தந்தையார் எழுந்திருக்க முடியாத நிலையில் காயமுற்றார் இருவரையும் உடனடி சிகிச்சைக்காக யாழ்ப்பாண மருத்துவ மனைக்கு அனுப்பினோம் இது சம்பந்தமாக திரு கந்தையா 16-9-77ல் பிரதம அமைச்சருக்கு அனுப்பிய பிரதியையும், நான் இணைப்பு அதிகாரியிடம் சமர்ப்பித்த கொப்பியையும் அனுப்புகிறேன்.

சிங்களவருக்கு காணி கொடுக்க இராணுவம் பயமுறுத்தியது

பாவற்குளம் வீதியில் உள்ள தெய்வானை என்ற ஒரு விதவையின் காணியை இராணுவ உத்தியோகத்தவர்கள் சென்று உடனடியாக விட்டு வெளியேறும்படியும் குறித்த காணியை ஒரு சிங்களப் பிரமுகருக்கு கொடுக்க வேண்டுமெனவும் வற்புறுத்திப் பயமுறுத்தி உள்ளார். இது தொடர்பாக இணைப்பதிகாரிக்கு முறையிட்டார்.

இருபத்தியோராந்திகதி இரவு வவனியாக்கடைவீதியில் உள்ள வியாபாரக் கடைகள், கொள்ளையடிக்கப்பட்ட

(6ம் பக்கம் பார்க்க)

அழகொல்லை விநாயகருக்கு இன்று கும்பாபிஷேகம்

மிகப் பழமையும், புதுமையும் கொண்டது, அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலயம் இந்துமாகடலின் முத்தென விளங்கும் ஈழமணித் திருநாட்டின் முடிமணியாய் விளங்கும் யாழ்ப்பாணத்து மேல்பாலுள்ளதும், எல்லா வளங்களும் பொலிந்து விளங்குவதும், திருவருட் செல்வர்களால் பெருமை பெற்றதுமாகிய அளவெட்டிக் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அழகொல்லை விநாயகப் பெருமான் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இன்று காலை 10-30 மணிக்கும் 11-10 மணிக்கும் இடையில் வரும் பஞ்சமத் திதியும், அனுஷ நட்சத்திரமும், குரு கால வோரையும் ராஜவேளையும். அமிர்தசித்த யோகமும் கூடிய சுபதினத்தன்று நிகழ்கின்றது.

மாருதப்புரவீகவல்லியினால் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஸ்தாபிக்கப்பட்டது. அவருடைய குதிரை முகம் மாறியபோதும், அது அவருக்கு மாறியமாதிரித் தெரியவில்லையாம். இதற்குக் காரணம், விநாயகப் பெருமானை வணங்காமையேயாகும் என்பதனை உணர்ந்து, அந்தக் குறைபாட்டைநிவர்த்திசெய்ய மாவிட்டபுரத்திலிருந்து தென் திசை நோக்கி ஏழு விநாயகர் ஆலயங்களை அமைப்பித்தார் என்பது வரலாறு. கொல்லங்கலட்டி விநாயகர் ஆலயம், வறுத்தலைவிளான் விநாயகர் ஆலயம், அழகொல்லை விநாயகர் ஆலயம், கும்பழாவளை விநாயகர் ஆலயம், பெருமாக்கடவை விநாயகர் ஆலயம், ஆலங்குளாய் விநாயகர் ஆலயம், கல்வளை விநாயகர் ஆலயம் ஆகியவையே பிரஸ்தாப ஏழு விநாயகர் ஆலயங்களுமாகும். இந்த முறையில் மூன்றாவதாக அமைந்த ஆலயந்தான் அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலயமாகும்.

இந்த ஆலயத்தைக் கட்ட முற்பட்டபோது அது, மீண்டும் மீண்டும் இடிந்துபோனதாகவும், அதனால் மனமுடைந்த தொழிலாளி கவலைப்பட்டதாகவும், விநாயகப்பெருமான் அவருக்குக் கனவில் தோன்றி, ஆலயத்தைக் கட்ட முற்பட்டபொழுது எடுத்த அளவு தவறானதென்றும், சரியான அளவு ஓலை, குறிக்கப்பட்ட ஓரிடத்தில் இருப்பதாகவும், அதனை எடுத்து, அதன்படி கட்டும்படி கூறியதாகவும் அதன்படி கட்டியபோது எல்லாம் நன்றாக அமைந்ததாகவும் சொல்லுகிறார்கள். அளவு ஓலை என்பதே காலப்போக்கில் அழகொல்லை என மருவியதாகக் கூறுகிறார்கள் அழகிய சோலைகள் சூழ்ந்தமையால் அழகொல்லை என வந்ததென்றும் கூறுவாருமுண்டு

—வே: சுப்பிரமணியம்

"தமிழரின் கடைகளைத் தாக்க

பதவிய சிங்களவர்கள் ஆயுதத்துடன் வருகிறார்கள்'

உதவி அரசாங்க அதிபர் கூறியதாக தொழிலாளி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"வவனியாவிலுள்ள தமிழர் கடைகளை அடித்து நொறுக்கவேண்டும். எங்கள் ஆட்கள் சிலர் இருக்கிறார்கள். உங்களிடமுள்ள ஆயுதங்களைக் கொண்டு புறப்பட்டுவாருங்கள். பதவியாவிலுள்ளசிங்களவர் துவக்குடன் வருகிறார்கள்"

வவனியா சிங்களபிரிவு உதவி அரசாங்க அதிபர் ஆகஸ்ட் கலவரத்தின்போது பிரப்பமடு சிங்களவர் மத்தியில் பேசும்போது மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தாக நம்பிளான் அகமட் என்பவர் சன்சோனி கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

வவனியாவைச் சேர்ந்த தொழிலாளியான நம்பிளான் அகமட் மேலும் கூறியதாவது:

"ஆகஸ்ட் 21ம் தேதி நான் மற்றொரு மேசனுடன் பிரப்பமடுவில் தொழில் செய்துகொண்டிருந்தேன். அப்போது சிங்கள பிரிவு உதவி அரசாங்க அதிபர் சில இராணுவத்தினருடன் அங்கு வந்து கிராமத்தவர்களைச் சந்தித்தார்

அடித்து நொறுக்குங்கள்

"வவனியா தமிழர்களின் கடைகளை அடித்து நொறுக்க புறப்படுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார்.

அவர்களை மாமடு வரும்படியும் வாகனம் அனுப்புவதாகவும் உதவி அரசாங்க அதிபர் கூறினார் சம்பவம் நடந்தபின் என் முறைப்பாட்டை பொலிஸார் பதிந்தனர் என்னை லோட்டஸ் பாமுக்கு கூட்டிச் சென்று அடித்து வதைத்து பொலிஸாருக்கு சொன்னது பொய்என வாக்கு மூலம் எடுத்தார்கள் டிசம்பர் 26-ம் தேதி நான் சன்சோனி ஆணைக்குழுவிற்கு அறிவித்தேன் என்று தெரிவித்தார்.

கணவரின் தலையில் கம்பியால் தாக்கினர்

அவர் இறந்து போனார்!!'

மூன்றுபிள்ளைகளின் தாய் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"இரத்மலானையிலுள்ள எங்கள் வீட்டிலிருந்து பாதுகாப்பிற்காக, கணவனுடனும். பிள்ளைகளுடனும் கொம்பனித் தெருவிலுள்ள சகோதரி வீட்டுக்கு சென்றுகொண்டிருந்தேன். பின்னால் வந்த 4 குண்டர்கள் கணவனின் தலையில், கம்பியால் அடித்தனர். இதனால் அவர் மரணமடைந்தார்."

மயிலிட்டியைச் சேர்ந்த திருமதி திலகவதி அருமைநாயகம், நேற்று சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறுகூறினார்.

திருமதி அருமைநாயகம் மேலும் கூறியதாவது: என் கணவர் புகையிரதப்பகுதியில் போர்மனாக கடமையாற்றினார். இரத்மலானை ரயில்வே விடுதியில் நானும் கணவரும் 3 பிள்ளைகளும் தங்கியிருந்தோம். ஆகஸ்ட் 19ம் திகதி கணவர் காலை வேலைக்குபோய் விட்டு தாமதிக்காமல்வந்தார். குழப்பம் நடப்பதாக அறிந்து நாங்கள் வீட்டில் தனியாக இருந்ததால் அவர் வந்தார்.

கம்பியால் அடித்தனர்

"19ம் தேதி இரவு சத்தம் கேட்டது எனது சகோதரி கொம்பனிதெருவில் இருந்தார் பாதுகாப்பிற்காக அங்குபோக முடிவுசெய்தோம். எனது தம்பி எங்களைப் பார்ப்பதற்காக வந்திருந்தார். இங்கிருக்கப் பயமாக இருக்கிறது. தம்பியுடன் கூட்டிக்கொண்டு போவோம் என்று கணவர் கூறினார்.

"கொம்பனித் தெருவுக்குப் புறப்பட்டோம் பஸ் நிலையம் சென்றோம். கதவுகளைப்பூட்டி விட்டுவருவதாக கணவர் கூறினார். ஒன்றரைமணி நேரமாக பஸ் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் டாக்ஸியில் போக முடிவுசெய்தோம். தம்பி டாக்ஸி பிடிக்கச் சென்றார். நாங்கள் சென்றுகொண்டிருந்தோம். பின்னால் வந்த கணவரை 4 பேர் தாக்கினார்கள். கையில் அடித்து கடிகாரத்தை பறித்தனர். சூட்கேஸையும் பறித்தனர். தலையிலும் கம்பியால் அடித்தனர். நான் அழுது குழறினேன். கணவன் நிலத்தில் விழுந்துவிட்டார். பிள்ளைகளை இழுத்துக்கொண்டு பக்கத்து வீட்டிற்கு ஓடினேன். குண்டர்களுடன் போராடி இருப்புகம்பியைப் பறித்ததாக தம்பி கூறினார்.

அவ்வீதியால் காரில் ஒரு சிங்களப் பிரமுகர் வந்தார். அப்போது 2 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் வந்தனர். பாதுகாப்புக்கு வருமாறு பொலிசாரைக் கேட்க அவர்கள் மறுத்துவிட்டனர். பின் அந்தச் சிங்களப் பிரமுகர், காரில் கணவனை ஏற்றி பொலிஸ் நிலையம் கொண்டுசென்றார்.

கல்கிசை பொலிஸுக்குப் போனோம் என் கணவர் களுபோவல ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். நிலைமை மோசமாகவே கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். நாங்கள் கொம்பனித்தெருவுக்கு எனது சகோதரி வீட்டுக்குப் போனோம் கல்கிசை இன்ஸ்பெக்டர் மரினு ஒருமாலேயாக்காரர் அவர் பெரும் உதவி செய்தார்.

"21-ம் தேதி என்கணவர் இறந்துவிட்டதாக அறிந்தேன். கொழும்பில் அடக்கம் செய்யப்பட்டது. குழந்தைகளுடன் நான் யாழ்ப்பாணம் வந்து சகோதரி வீட்டில் இருக்கிறேன்.

"என்கணவருக்கு இறக்கும்போது 37 வயது அவர் உயிருடன் இருந்தால் இன்னும் 21 வருடம் வேலைபார்த்திருப்பார். என் மூத்த பெண்பிள்ளைக்கு 6 வயது இரண்டாவது ஆண் குழந்தைக்கு 4 வயது கடைசிப் பெண் குழந்தைக்கு 2 வயது எனக்கு சமூக சேவைப்பகுதியினர் 6450 ரூபா தந்தார்கள் எனக்கு 10,000 ரூபா நஷ்டம் இரத்மலானையில் உள்ள வீட்டை உடைத்து கொள்ளையடித்துவிட்டனர். சூட்கேசுடன் என் 5 பவுண் நகைகளையும் பறிகொடுத்துவிட்டேன். (ஈ)

மரணதண்டனை பெற்றவர் மறுவிசாரணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

மரணதண்டனை பெற்றவருக்கு மறுவிசாரணையில் விடுதலை கிடைத்தது.

கரவெட்டி கொலை வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணை செய்யப்பட்ட போது விசாரணை நடுவில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் 20-11 75ல் விசாரணை செய்யப்பட்டு எதிரிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. எதிரி தீர்ப்பை எதிர்த்து அப்பில் செய்ததை தொடர்ந்து மறுவிசாரணை நடத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இவ்வழக்கில் கரவெட்டியில் 74 நவம்பர் 22ம் திகதி வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்தை கொலைசெய்ததாக, செல்லத்துரை விஜயமூர்த்தி மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர் ஐ. கனகரத்தினம் ஆஜரானார். (ஈ)

மூதறிஞர்செல்வா நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

மூதறிஞர் செல்வாவின் நினைவு தினக்கூட்டம் இம்மாதம் 31-ம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்கள் உரையாற்றுவார்கள். (ஈ)

இலங்கையில்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்கள் கோவிக்பதுக்குளம் திரு. ஜெயபாலசுந்தரம் என்பவருக்குச் சொந்தமான வீட்டில் வாடகைக்கு இருக்கும் ஒரு பொலிஸ்உத்தியோகத்தர் பொறுப்பில் இருக்கிறதென்ற நம்பகமான தகவலை நான் அறிந்தேன். உடனடியாக இணைப்பதிகாரியைக் கண்டு குறித்த வீட்டைத் திடீர்ப்பரிசோதனை செய்யும்படி கேட்டேன். (மிகுதி நாளை வரும்)

இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

விவசாயகாணிஅமைச்சு கமசேவைப்பிரிவில் கடமையாற்றிய திரு. தா. விநாயகமூர்த்தி வடமராட்சி தெற்கு மேற்கு உதவிஅரசாங்க பணிமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் மன்னார் கச்சேரி, மாந்தை முதலி காரியாதிகாரி பிரிவுகளிலும், யாழ்ப்பாணம் கச்சேரி, யாழ்ப்பாணம் காரியாதிகாரி கந்தோர், வவனியா கச்சேரி, ஒட்டுசுட்டான் காணிக்கந்தோர், செட்டிக்குளம் காரியாதிகாரி கந்தோர், கொழும்பு உள்நாட்டு அமைச்சு மதுபரிபான திணைக்களத்திலும், உணவு அமைச்சு விற்பனவு திணைக்களத்திலும் கடமையாற்றியுள்ளார்.

"ஈழத் தமிழ்த்திரைப்படத்துறை முன்னேறிவருகிறது"

சிவாஜி பாராட்டு

(வெள்ளவத்தை)

"திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கைத் தொழில்நுட்பக்கலைஞர்கள் திறமைசாலிகள். இயற்கைக் காட்சிகளைச் சிறப்பாகப்படமாக்கியுள்ளார்கள். இலங்கைத் தமிழ்த்திரைப்படத்துறை சிறப்பாக முன்னேற்றமடைந்து வருகிறது."

இவ்வாறு விஜயா ஸ்டூடியோவில் நடைபெற்ற "பைலட் பிரேம்நாத்" படப்பிடிப்பின் இடைவேளையின்போது இலங்கையில் தயாரிக்கப்படும் சக்கிரன் லிமிடட்டின் "நெஞ்சுக்கு தெரியும்" திரைப்படத்தின் மூன்று பாடல்களுக்கான படக்காட்சியைப் பார்த்துவிட்டு நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மனந்திறந்து பாராட்டினார்.

"நெஞ்சுக்கு தெரியும்" திரைப்படத்தின் பாடல்காட்சியில் நடிகர்கள் மனோகரன் ஆஸாத் நடிகை சந்திரகலா ஹெலன்குமாரி ஆகியோர் நடித்திருந்தனர். கமரா டைரக்ஷன் ஆகிய பொறுப்புகளை லெனின் மொறாயஸ் ஏற்றுள்ளார்.

வவனியாப் பட்டினத்தை—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

121 பேர் சிங்கள பொலிசாரா?-ஆம் 15 பேர் தமிழர்.

கமிஷனர்: வவுனியா முழுவதற்குமா?-ஆம் நகரம் முழுவதற்கும்.

சட். சில்வா: பொலிஸ் அதிபருக்கு போன் பண்ணினீர்?-ஆம் பொலிஸார் தாக்குதல் பற்றி கூறினேன்.

சட்: 22-ம் திகதி நகரத்தை மட்டுமன்றி கிராமத்தையும் கொள்ளையடித்தனர்?-ஆம்.

சட்: கிராமத்தில் யார் கொள்ளையடித்தார்கள்?- பல வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டது. பொலிஸில் புகார் செய்யப்பட்டது.

சட்: கிராமக் கொள்ளையில் பொலிஸார் சம்பந்தப்படவில்லை?-இல்லை.

கமிஷனர்: கிராமத்தவர்கள் கொள்ளையடித்தனர்?ஆம்,

சட்: ஆகஸ்ட் 18, 19-ம் தேதிகளில் வவனியாவில் சிங்களக் கடைகள் தாக்கப்பட்டது? இல்லை.

சட்: கொடித்துவக்கு என்பவரின் சைக்கிள் கடை எரிக்கப்பட்டது? ஆம்

சட்: பியசேனாவின் தேநீர்க்கடை எரிக்கப்பட்டது? தெரியாது.

கமிஷன்: அதுபற்றி தெரியாதா? தெரியாது. சைக்கிள் கடைச் சம்பவம் தெரியும் நான் ஜீப்பில் போய்ப் பார்த்தேன். சிறுசைக்கிள் கடை எரிக்கப்பட்டிருந்தது.

சட் சில்வா: ஸ்ரீபத்மநாதனை தெரியுமா?' ஆம்.

சட்: அவரைப் பொலிசார் கைது செய்தது தெரியுமா? ஆம்.

(மிகுதி நாளை வரும்)

இன்று கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை கிழக்கு கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்பாள் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறுகிறது. இரவு உற்சவம் நிகழும். (அ)

மரண அறிவித்தல்

நயினை சின்னத்தம்பி வேலாயுதம்

நயினாதீவு சின்னத்தம்பி வேலாயுதம் காலமானார். இவர் வைரிப்பிள்ளையின் அன்புக் கணவரும், பரமநாதன், சபாரெத்தினம், முத்தம்மா, செல்லம்மா, யோகாம்பிகை, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தலிங்கம் சரவணமுத்து, சிவப்பிரகாசம், சண்முகநாதன், புவனேஸ்வரி, கெங்காதேவி ஆகியோரின் மாமனாருமாவர். அன்னாரின் தகனக்கிரிகைகள் நயினாதீவு சல்லிபரவை மயானத்தில் 29-3-78ம் திகதி (இன்று) பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை அன்பர்களும், உறவினர்களும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: பிள்ளைகள் பரமநாதனும், சகோதரர்களும்

8895

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 58-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389, Registered as a Newspaper in Srilanka